**Tamilmanam International Research Journal of Tamil Studies**

**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**

https://tamilmanam.in/

*Article Type: Research Article*

# Life Principles Highlighted Through the Symbolism of the Elephant in the Kurinji-Thinai Poems of Sangam Akananuru

**R. Sellakkannu[1] *, Prof. Dr. S. Ravi[1],**

[1] Research Scholar, Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur, Tamil Nadu, India.
[2] Research Guide, Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur, Tamil Nadu, India.
* Correspondence: sellakkannu110795@gmail.com;

**Received**: 22-12-2025; **Revised**: 25-12-2025; **Accepted**: 26-12-2025; **Published**: 01-12-2025

**Abstract:** This article examines how ancient Tamil poets attempted to express human life and lived experiences by describing the actions of the elephant, a non-human living being, in the akam poems they composed. Furthermore, by portraying the heroine's condition based on the elephant, her state is clearly communicated to the hero.

**Keywords:** Akananuru, Kurinji Thinai, Elephant, Life Values

**References:**

1. Sami, B. L., Depiction of Animals in Sangam Literature, Tirunelveli South Indian Saiva Siddhanta Publishing Society, Chennai, 2022.

2. Jeyabal, R. (Ed.), Akananuru (Volumes 1 & 2), New Century Book House (P) Ltd., Ambattur, Chennai, 2013.

3. Thirugnanasambandham, S. (Ed.), Tolkappiyam: Porulathikaram – Text and Commentary, Kathir Publications, Thiruvaiyaru, 2018.

4. Manickam, V. S. P., Tamil Kadhal (Tamil Love), Meyyappan Tamil Research Centre, Chidambaram, 2002.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# சங்க அகநானூற்றுக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் யானையின் மூலம் வலியுறுத்தப்படும் வாழ்வியல் நெறிகள்

*[1]**இரா. செல்லக்கண்ணு,** முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, சமூக அறிவியல் மற்றும் மொழிகள் புலம், தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.

[2] **பேரா. முனைவர் ச. இரவி**, நெறியாளர், தமிழ்த்துறை,

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர் , தமிழ்நாடு, இந்தியா.

**சுருக்கம்(abstract)**

இக்கட்டுரைப் பழந்தமிழ்ப் புலவர்கள் தாங்கள் புனைந்த அகப்பாடல்களில் அஃறிணை உயிராகிய யானையின் செயல்பாடுகளை விவரிப்பதன் மூலம் வாழ்க்கையை வெளிப்படுத்தும் முயற்சிகளை எவ்வாறு செய்தார்கள் என்பது ஆராயப்படுகின்றது. மேலும் இங்கு தலைவியின் நிலையை யானையை அடிப்படையாகக் கொண்டு விவரிப்பதன் மூலம் தலைவியின் நிலை தலைவனுக்குத் தெளிவுபடுத்தப்படுகின்றது.

**திறல் சொற்கள்:** அகநானூறு, குறிஞ்சித் திணை, யானை, வாழ்வியல் நெறிகள்.

**முன்னுரை**

இலக்கியங்கள் அவ்வக்காலகட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையை வெளிப்படுத்தும் கருவிகளாகும். சங்க கால மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாக சங்க இலக்கியம் திகழ்கின்றது. சங்க கால மக்கள் இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தனர். திணை அடிப்படையில் வாழ்ந்த அம்மக்கள் அந்நிலத்தில் வாழும் உயிரினங்களைச் சார்ந்தே வாழ்ந்துள்ளனர். அவற்றில் அஃறிணை உயிராகிய யானையும் ஒன்றாகும். யானைகள் சங்கப் பாக்களில் வாழ்வியல் நெறிகளை மாந்தர்களுக்குக் கற்பிக்கின்றன. அந்த வகையில் அகநானூற்றுக் குறிஞ்சித் திணையில் யானைகள் மூலம் வலியுறுத்தப்படும் வாழ்வியல் நெறிகளை வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**உள்ளுறையுவமங்கள்**

உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பு எனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே.

(தொல்.பொருள்.238)

என்னும் தொல்காப்பிய நூற்பா கவிதையின் உள்ளுறையாகக் கூறப்பெறும் பொருளை உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என ஐவகைப்படுத்துகிறது. உடனுறை என்றாலும் இறைச்சி என்றாலும் ஒன்றே ஆகும்.

உள்ளுறையுவமம் என்பது தமிழ் இலக்கியத்திற்கே உரிய தனிநெறி. அகப்பொருளாகிய ஐந்திணைக் கண்ணே தான் ஆளுதற்குரியது. கருப்பொருள் என்னும் இயற்கைச் சூழலிலிருந்து புனையப்படுவது. வெளிப்பார்வைக்குச் செடி, கொடி, மரம், பறவை, விலங்குகளின் செயல்களைப் புனைவது போற் காணப்படும். இவ்வாறு இயற்கையைப் புனைவு செய்வது அகப்புலவர்களின் நோக்கமன்று. உள்ளொன்று வைத்து அதற்கிணையான புறமொன்று கூறுவர். கூறினும் அகத்தொடர்பான உட்கருத்து மெய்யுள் உயிர்போல விளங்கிக் கிடக்கும்.

"வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்
புலிசெத்து, வெரீதிய புகர்முக வேழம்,
மழைபடு சிலம்பில் கழைபட, பெயரும்
நல்வரை நாட! நீ வரின்" (அகம் 12: 10-13)

பகற்குறி, இரவுக்குறியை மறுத்தும், தலைவி இற்செறிக்கப்பட்டமையை அறிவுறுத்தியும் தலைவியை மணந்து கொள்ளுமாறு தலைவனிடம் தோழி கூறும் பாடல் இது.

**இயற்கைப் புனைவு**

குறவர்கள் குடிசையை நாட்டினர். தேன் சிந்தும் வேங்கைப் பூக்கள் அக்குடிசை மறையுமாறு அதன் மீது விழுந்து பரந்து கிடக்கும். புள்ளிகளைக் கொண்ட முகத்தினையுடைய யானை அப்பூக்களின் தோற்றத்தைப் புலியெனக் கருதி அஞ்சி மேகம் படிந்த மலைப்பக்கத்தில் மூங்கில்கள் முறிந்து விழும்படி பெயர்ந்து ஓடும்.

இத்தகைய இயற்கை நலம் மிக்கது தலைவனின் ஊர். தலைவனின் ஊரில் பலவகை இயற்கைகள் உண்டாதலின், புனைவு பலவாறு செய்யலாம். தோழி இனி இயற்கைக் காட்டப் புனைந்தாளா ? உள்ளக்குறிப்பைக் காட்ட அதற்கேற்றபடி ஓர் இயற்கையைப் புனைந்து கொண்டாளா? அகப் பாடல்களில் இயற்கைப் புனைவிற்கு உள்ளுறைப் பொருள் வேண்டும். இதுவே இயற்கைப் புனைவில் உள்ளுறைப் பொருளின் ஆழம் பொதிந்து இருப்பதைக் குறிப்பால் உணரலாம். (தமிழ்க்காதல்: 169-170)

**யானையின் மூலம் வலியுறுத்தப்படும் வாழ்வியல் நெறிகள்:**

**யானையும் வரைவு கடாதலும்:**

உள்ளுறை தரும் அகப்பாடல்களே மிகப் பல. அங்ஙனம் தாராத இயற்கைப் பாடல்கள் அகத்துறைக்கண் சிறப்பில, வழுவமைதிப் படுவன.

யானையானது வெருவத் தகாத குரம்பையை வெருவத் தக்க புலியென்று கருதித் தனக்கு உணவாகியக் கழை முறியப் பாய்ந்தாற் போல, வெருவத்தகாத

எங்கள் தமரை வெருவி வரைய முயலாது திரியவே, நாங்கள் இறந்து படும்படியாயிற்று என்று தலைவி வருந்துகிறாள். அதாவது யானை தான் கொண்ட அச்சத்தினால் தனக்குப் பிடித்த

மூங்கிலையும் அது முறித்துக்கொண்டு செல்வது போல, பொய் அச்சம் கொண்டு போய்விட எண்ணும் தலைவன், அவனது மனதிற்கினிய தலைவியின் அன்புள்ளத்தை உடைத்துவிட்டுச் செல்கிறான் என்றுப் புலவர் கருப்பொருளான யானையின் செயல்பாட்டின் மூலம் தலைவியின் நிலையைத் தலைவனுக்குத் தெளிவு படுத்துகிறார்.

**யானையும் அன்பும்**

"ஈன்றணி இரும்பிடி தழீஇ, களிறுதன்
தூங்குநடைக் குழவி துயில்புறங் காப்ப,
ஒடுங்கு அளை புலம்பப் போகி, கடுங்கண்
வாள்வரி வயப்புலி கல்முழை உரற"

(அகம் 168: 9-12)

இரவு நேரத்தில் வரும் வழியின் ஏதம் குறித்து எடுத்துக்கூறி, இனி இரவுக்குறிக்கண் வருதலைத் தவிர்க்குமாறும், தலைவியை மணந்து செல்லுமாறும் தோழி கூறும் பாடல் இது.

களிறானது, ஈன்ற அணிமையையுடைய தன் பிடியினைத் தழுவிக் கொண்டு, அசைந்து நடக்கும் இயல்பினதான தன் கன்று உறங்கும் இடத்தைக் காவல் காத்திருக்கும். அஞ்சாமையுடைய, வாளைப் போன்ற கோடுகளைக் கொண்ட வலிமைமிக்க புலியானது, தான் உறங்கிய ஒடுங்கிய குகையை விட்டு வெளியேறி, பெரிய மலைக் குகையில் முழக்கம் செய்யும். இத்தகைய இயற்கை நலம் மிக்கது தலைவனின் இரவுக்குறி வழி.

அஃறிணை உயிராகிய ஆண் யானை தனது பிடி மற்றும் தன் யானைக்கன்றை அன்புடன் பாதுகாக்கும் நிகழ்வைப் பார்க்கும்போது, அஃறிணை உயிரினமே குடும்பத்தின் மீது மிகுந்த அன்புணர்வுடன் நடந்து கொள்கிறது என்பது புலனாகிறது. ஆனால் தலைவன் தலைவியை மணந்து கொள்வதில் கருத்தின்றி களவின்பத்தையே பெரிதும் விரும்பி தலைவியை வருத்தமுறச் செய்கிறான் என்ற கருத்தை யானையின் மூலம் புலவர் வெளிப்படுத்துகிறார்.

**யானையும் தலைவியின் நம்பிக்கையும்:**

"முளைவளர் முதல மூங்கில் முருக்கி,
கிளையொடு மேய்ந்த கேழ்கிளர் யானை,
நீர்நசை மருங்கின் நிறம்பார்த்து ஒடுங்கிய,
பொரு முரண் உழுவை தொலைச்சி,கூர்நுனைக்"

(அகம் 332: 1-4)

யானை புலியைக் கொன்று, குருதிப் படிந்த தன் கொம்பினை மழைநீரால் கழுவி, பகைக் கொன்ற செருக்குடன் வண்டுகள் ஒலிசெயப் பிடி புணர்ந்து வாழைமரங்களை யுடைய மலையில் துயிலும் என்றது, தலைவன் அலர் கூறும் பெண்டிரின் வாயை அடக்கி, களவொழுக்கத்தால் ஏற்பட்ட

மாசு தீரத் தலைவியை மணந்து, சுற்றத்தாரும் பிறரும் கொண்டாடுமாறு செல்வம் மிக்க தன் மனையிலே தலைவியோடு இன்பம் துய்த்திருப்பான் என்று தலைவன் மீது தலைவி வைத்திருக்கும் நம்பிக்கை மற்றும் அன்பை யானையின் மூலம் புலவர் உணர்த்துகிறார்.

**முடிவுரை**

சங்கத் தமிழர் வாழ்வில் விலங்குகள் உணவுக்காகவும், வேட்டையாடுதலுக்காகவும், செல்லப் பிராணிகளாக வளர்ப்பதற்காகவும் மட்டுமல்லாமல், ஆறறிவு படைத்த மாந்தர்களுக்கு வாழ்வியல் நெறிகளைக் கற்பிக்கும் கருவிகளாகவும் இலக்கியங்களில் புலவர்களால் படைக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து விலங்குகளுக்கும், மனித சமூகத்துக்கும் இடையே உள்ள ஒப்பற்ற உறவு நிலையை சங்கப் பாக்களின் வழி அறிய முடிகிறது.

இவ்வாய்வின் தொடர்ச்சியாகப் பின்வரும் தலைப்புகளில் ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

1. வாழ்வியற் கோட்பாடுகளும் -யானைகளும்
2. சங்க கால வாழ்க்கை முறையும் யானைகளும்.
3. சங்க இலக்கியங்களில் யானைகள் மூலம் வலியுறுத்தப்படும் வாழ்வியல் நெறிகள்.

**சான்றாதாரங்கள்**


1. சாமி.பி.எல்., சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை,2022.
2. செயபால். இரா. (உ.ஆ.), அகநானூறு (தொகுதி-1,2), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், அம்பத்தூர், சென்னை, 2013.
3. திருஞானசம்பந்தம். ச. (பதி.ஆ.), தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம், திருவையாறு, 2018.
4. மாணிக்கம்.வ.சு.ப., தமிழ்க்காதல், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 2002.